# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை
## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# தமிழ்மொழி
## மதிப்பீட்டுத் தாள் 2024 – 2025
## வளர்தமிழ் 10

சுட்டெண்:

நேரம்: 180 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

www.tamiledc.com
Tamil Education Development Council
France

# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

## 1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய கூட்டில் புள்ளடி இடுக.

1. ‘செந்தமிழ்ச் செல்வர்’ என்ற பட்டத்தைப் பெற்றவர்

அ) காளமேகப்புலவர் ☐ ஆ) பாவேந்தர் ☐

இ) பாரதியார் ☐ ஈ) தேவநேயப்பாவாணர் ☐

2. குற்றெழுத்து ஒலிக்கும் கால அளவு

அ) 1 மாத்திரை ☐ ஆ) 2 மாத்திரை ☐

இ) 1/2 மாத்திரை ☐ ஈ) $1\frac{1}{2}$ மாத்திரை ☐

3. “பூவார் சோலை மயிலால...” என்ற பாடலை எழுதியவர்

அ) இளங்கோவடிகள் ☐ ஆ) நக்கீரர் ☐

இ) கம்பன் ☐ ஈ) முடியரசன் ☐

4. வயல் என்ற சொல்லின் பொருள்

அ) மனை ☐ ஆ) எழில் ☐

இ) பழனம் ☐ ஈ) கவின் ☐

5. கோவலன், கண்ணகி வரலாற்றைச் செங்குட்டுவனுக்குக் கூறியவர்

அ) தண்டமிழ்ச் சாத்தன் ☐ ஆ) திருத்தக்கதேவர் ☐

இ) கபிலர் ☐ ஈ) நாதகுத்தனார் ☐

6. மொழிக்கு இறுதியில் வராத எழுத்து

அ) ய் ☐ ஆ) ர் ☐

இ) ட் ☐ ஈ) ழ் ☐

7. நீங்கள் எங்கே செல்கின்றீர்கள்? இது

அ) கூற்றுச்சொல்லியம் ☐ ஆ) வியங்கோட்சொல்லியம் ☐

இ) வினாச்சொல்லியம் ☐ ஈ) ஏவற்சொல்லியம் ☐

8. பஃறுளியாற்றுக்கும் குமரியாற்றுக்கும் இடையே ________ நாடுகள் இருந்ததாக இலக்கியங்கள் கூறுகின்றன.

அ) 46 ☐ ஆ) 47 ☐

இ) 49 ☐ ஈ) 48 ☐

9. குமரிக்கண்டம் கடற்கோளால் உடைந்து சிதறிய பொழுது பிரிந்து போன பெருநிலப்பரப்புகள்

அ) அவுத்திரேலியா,ஆபிரிக்கா ☐ ஆ) அவுத்திரேலியா,ஐரோப்பா ☐

இ) அவுத்திரேலியா,அமெரிக்கா ☐ ஈ) ஆபிரிக்கா,ஐரோப்பா ☐

10. ஐ, ஔ என்பவற்றின் இனவெழுத்துகள்

அ) ஈ, ஊ ☐ ஆ) அ, உ ☐

இ) இ, உ ☐ ஈ) இ, எ ☐

11. செய்வித்தேன் என்பது

அ) தன்வினை ☐ ஆ) பிறவினை ☐

இ) குறிப்புவினை ☐ ஈ) செய்வினை ☐

12. 'புரட்சிப் பாவலன்' எனப் பாவேந்தரால் பாராட்டுப் பெற்றவர்

அ) கல்லடி வேலுப்பிள்ளை ☐ ஆ) விபுலாநந்தர் ☐

இ) ந.சி.கந்தையா ☐ ஈ) விவேகானந்தர் ☐

13. நடித்தவள் என்பது

அ) வினையாலணையும் பெயர் ☐ ஆ) தெரிநிலைவினைமுற்று ☐
இ) பொருட்பெயர் ☐ ஈ ) சினைப்பெயர் ☐

14. வேலையைச் சிறப்பாகச் செய்கின்றாய். இதில் தோன்றா எழுவாய்

அ) நான் ☐ ஆ) செய்கின்றாய் ☐
இ) வேலை ☐ ஈ ) நீ ☐

15. பின்வருவனவற்றுள் அகவினா

அ) எவ்விடம் ☐ ஆ) அவனா ☐
இ) என்ன ☐ ஈ ) நீயோ ☐

16. சேர மன்னர்களின் கொடி

அ) மீன்கொடி ☐ ஆ) விற்கொடி ☐
இ) புலிக்கொடி ☐ ஈ ) வீணைக்கொடி ☐

17. உவமை அணிக்கு எடுத்துக்காட்டு

அ) தளிர்க்கை ☐ ஆ) முகமதி ☐
இ) தமிழ்த்தேன் ☐ ஈ ) மொழித்தேன் ☐

18. கண் + எரிவு

அ) கண்னெரிவு ☐ ஆ) கண்எறிவு ☐
இ) கண்ணெரிவு ☐ ஈ ) கண்எரிவு ☐

19. வந்தோம் என்ற சொல்லின் விகுதி

அ) வா ☐ ஆ) ந் ☐
இ) த் ☐ ஈ ) ஓம் ☐

20. வெற்றி பெற்ற வீரர்கள் கழிபேருவகை அடைந்தனர். இங்கு கழி என்பது

அ) வினைச்சொல் ☐ ஆ) இடைச்சொல் ☐

இ) உரிச்சொல் ☐ ஈ ) பெயர்ச்சொல் ☐

21. ‘‘தண்டலை மயில்களாட...’’ என்ற பாடலில் விளக்கு ஏற்றினாற் போல் தோன்றுபவை

அ) மயில்கள் ☐ ஆ) செந்தாமரை ☐

இ) குவளை ☐ ஈ ) நீரலைகள் ☐

22. மறைந்த கண்ணகி ஒரு கற்பின் தெய்வம் எனக் கூறியவர்

அ) கோவலன் ☐ ஆ) நெடுஞ்சேரலாதன் ☐

இ) கயவாகு ☐ ஈ ) வேண்மாள் ☐

23. தனித்து நின்று பொருள் தரும் உயிர் எழுத்து

அ) பூ ☐ ஆ) ஏ ☐

இ) இ ☐ ஈ ) மா ☐

24. பின்வருவனவற்றுள் பொதுமொழி

அ) பொன்முடி ☐ ஆ) மண் ☐

இ) வைகை ☐ ஈ ) காற்று ☐

25. மாறனால் மல்லிகை நாட்டப்பட்டது. இங்கு வந்துள்ள உருபு

அ) இல் ☐ ஆ) ஐ ☐

இ) அது ☐ ஈ ) ஆல் ☐

புள்ளிகள் 25

## 2) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

இலங்கை 'சிவபூமி' எனத் திருமூலரால் சிறப்பித்துக் கூறப்பட்டது. இலங்கையில் வரலாற்றுக்கு முற்பட்டகாலம் முதலே சைவசமயம் நிலை பெற்று வளர்ச்சியுற்றிருந்தது. ஈழத்தின் ஈச்சுரங்களில் ஒன்றான திருக்கேதீச்சுரம் நாகர்களின் பண்டைய வழிபாட்டுத் தலமாக இருந்தது. இது ஆய்வாளர்களின் கருத்தாகும். பண்டைய ஈச்சுரங்கள், பிராமிக் கல்வெட்டுகள், பிற நாட்டார் குறிப்புகள் என்பன இலங்கையில் சைவசமயம் இருந்தமை பற்றிய சான்றுகள் ஆகும். இராவணன் சிறந்த சிவபக்தன் என்பதை 'இராவணன் மேலது நீறு' என்ற சம்பந்தருடைய தேவாரம் உணர்த்துகின்றது. இராவணனும் அவனது தாயும் வழிபட்ட தலமாகக் கோணேச்சுரம் விளங்குகின்றது. இராவணன் தனது தாயின் ஈமக் கடன்களைச் செய்வதற்காக அமைக்கப் பெற்றதே கன்னியா வெந்நீர் ஊற்றுகள் எனத் 'தட்சணகைலாய புராணம்' கூறுகின்றது. விசயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பே இலங்கையில் சைவசமயம் செழிப்புற்றிருந்ததென 'இலங்கையின் பௌத்தவரலாறு' என்ற நூலில் கூறப்பட்டுள்ளது.

1. எது நாகர்களின் பண்டைய வழிபாட்டுத் தலமாக இருந்தது?

2. இலங்கை ‘சிவபூமி’ என யாரால் சிறப்பித்துக் கூறப்பட்டது?

3. விசயன் இலங்கைக்கு வருவதற்கு முன்பே இலங்கையில் சைவசமயம் செழிப்புற்றிருந்ததெனக் கூறும் நூல் எது?

4. ‘இராவணண் மேலது நீறு’ என்ற சம்பந்தருடைய தேவாரம் எதை உணர்த்துகின்றது?

5. இலங்கையில் சைவசமயம் இருந்தமை பற்றிய சான்றுகளைத் தருக.

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. இமயத்தில் எடுத்த கல்லைத் தமிழகம் வரை சுமந்து வந்தவர் யாவர்?

2. ‘‘வடதிசை மன்னர் சிலர் எம்முன்னிலையிலேயே தமிழையும் தமிழரசரையும் பழித்துரைத்தனர்’’ இக்கூற்று யாரால், யாருக்குக் கூறப்பட்டது?

3. குமரிக்கண்டத்தில் ஓடிய ஆறுகள் எவை?

4. குமரிக்கண்டம் ஆய்வாளரால் எப்படி அழைக்கப்பட்டது?

5. கடைசிக் கடற்கோளின்போது ஆற்றிடைக் குறையாக இருந்து பிரிந்து தனித்தீவாகிய நாடு எது?

6. காலத்தால் முந்திய ஊடகமாக அமைவது எது?

7. சொற்பொருள் தருக.

எழினி ______

துயில் ______

புள்ளிகள் 10

**4. பின்வரும் கவிதைத் தலைப்புகளுள் ஒன்றினைத் தெரிவு செய்து எட்டு வரிகளுக்குக் குறையாமல் கவிதை எழுதுக.**

1. நட்பு

2. பறவைகள்

புள்ளிகள் 10

## 5) அ) பந்தியை வாசித்து இலக்கண வினாக்களுக்கு விடை எழுதுக.

நான் நிமிர்ந்து வானத்தைப் பார்த்தேன். வானத்தில் முகில் கூட்டங்கள் அலைந்து கொண்டிருந்தன. அங்குமிங்கும் இருந்த கார் முகில்கள் கலைந்து செல்கின்றன. அங்கே பொற்குடம்போல நிலவுமகள் காட்சி அளித்தாள். ஆகா! என்னே அழகு! என அவளை உற்று நோக்கினேன். அவளைப் பார்த்த படியே மெல்லமெல்ல நடந்தேன். அவளும் என்னைத் தொடர்ந்து வந்தாள். நான் ஓடிச்சென்றேன். அவளும் என்னைத் தொடர்ந்தாள். என்னே! விந்தை!

1. மெய்ப்பாட்டுச் சொல்லியம் ஒன்று தருக.

______________________________

2. வினையெச்சம் ஒன்று தருக.

______________________________

3. பொற்குடம் என்பது எவ்வகைப் புணர்ச்சி?

______________________________

4. இடைச்சொல் ஒன்று தருக.

______________________________

5. இங்கு வந்துள்ள இணைமொழியைத் தருக.

______________________________

| புள்ளிகள் 10 |
|---|

**ஆ) 1. தரப்பட்டுள்ள வினைச்சொற்களின் பகுதி, இடைநிலை, விகுதி என்பவற்றைத் தருக.**

| | பகுதி | இடைநிலை | விகுதி |
|---|---|---|---|
| செல்வான் | | | |
| பறந்தன | | | |
| வலைஞன் | | | |

புள்ளிகள் 03

**2. 1. முன்னிலை ஏவற் சொல்லியம் ஒன்று தருக.**

________________________________________

**2. எடுத்துக்காட்டுத் தருக.**

1. குறிப்புவினை ________________________

2. உயிர்முன்உயிர் ________________________

புள்ளிகள் 02

**6) தரப்பட்டுள்ள சொற்குவியலில் இருந்து கருத்துக்குப் பொருத்தமான பழமொழிகளைக் கண்டறிந்து எழுதுக.**

| | | | |
|---|---|---|---|
| பதறாத | அழுத | தொட்டிலிற் | காலை |
| காரியம் | ஏழை | பழக்கம் | வாளை |
| ஒக்கும் | இகழ்ச்சியடையார் | ஆழமறியாது | |
| சிதறாது | கண்ணீர் | விடாதே | மட்டும் |
| முயற்சியுடையார் | சூரிய | சுடுகாடு | |

1. அமைதியின் வெற்றி.

______________________________

2. முயற்சியின் பயன்.

______________________________

3. ஏழ்மையின் வலிமை.

______________________________

4. ஆராய்ந்து செய்.

______________________________

5. பழக்கத்தின் வலிமை.

______________________________

புள்ளிகள் 05

## 7) மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.

1. ____________________ நீண்ட நாரைகள் கூட்டமாக வானில் பறக்கும் ____________________ வியப்பூட்டுகின்றது.

   ( அழகு, அலகு )

2. ____________________ படிந்த பற்களை உடைய முதியவர் ஏரியின் ____________________ யில் நின்று மீன் விற்றார்.

   ( கரை, கறை )

3. பெரியவர் ஒருவர் மாவீரர் ____________________ போற்றி, பூங்காவில் ____________________ நாட்டினார்.

   ( மரம், மறம் )

4. ____________________ மரக்கிளையில் சிலந்தி பின்னிய ____________________ பூச்சி ஒன்று சிக்கியது.

   ( வலையில், வளைந்த )

5. நள்ளிரவில் பெய்த மழை பயிர்களை ____________________ பின்னர், மக்கள் அரசு ____________________ உதவித் தொகையைப் பெறக் காத்திருந்தனர்.

   ( அழித்த, அளித்த )

புள்ளிகள் 05

**8) பொருத்தமான சொல்லை வைத்து, குறளை நிறைவு செய்க.**

1. இருந்தோம்பி இல்வாழ்வ தெல்லாம் ____________________

   வேளாண்மை செய்தற் பொருட்டு

   ( பரிந்தோம்பி, விருந்தோம்பி, மருந்தோம்பி )

2. தெய்வத்தான் ஆகாது எனினும் முயற்சிதன்

   ____________________ கூலி தரும்

   ( கைவருத்தக், கண்வருத்தக், மெய்வருத்தக் )

புள்ளிகள் 05

**9) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- மொழிஞாயிறு தேவநேயப்பாவாணர்

- இயற்கை இன்பம்

- நீர் வாழும் நாட்டிலுள்ள சுற்றுலா இடங்களும் அவற்றுள் நீர் பார்த்து மகிழ்ந்தவையும்

- நீர் பார்த்த கலைநிகழ்ச்சி பற்றி தாயகத்தில் வாழும் நண்பிக்கு ஓர் அஞ்சல் எழுதுக.

புள்ளிகள் 15